**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 151/2022**

**வாதி தரப்பு சாட்சி–1 நல்லுசாமி திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க்** அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 16.02.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) எனது தகப்பனார் பெயர் பழனியாண்டி கவுண்டர். அவர் 1966 ம் வருடம் இறந்தார். தேதி, மாதம் தெரியாது. எனது தகப்பனாருக்கு நான்கு பெண்கள், ஒரு மகன். 1ம் பிரதிவாதி முருகேசனின் தாயார் நல்லம்மாள் பழனியாண்டி கவுண்டரின் மூத்த மகள் என்றால் சரிதான். நல்லம்மாள் இறந்துவிட்டார் என்றால் சரிதான். நல்லம்மாளுக்கு 1ம் பிரதிவாதியும், சிறும்பாயிம் வாரிசுகள் என்றால் சரிதான். 2 முதல் 4 பிரதிவாதிகள் எனது உடன்பிறந்த சகோதரிகள் என்றால் சரிதான். தாவா சொத்து எனது தகப்பனார் கிரையம் வாங்கிய சொத்து என்றால் சரிதான்.

2) பழனியாண்டி கவுண்டர் தான் கிரையம் பெற்ற 5 ஏக்கர் 68 சென்டில் சொத்தின் பாதி 2 ஏக்கர் 84 சென்டை 1ம் பிரதிவாதிக்கும், அவரது சகோதரர் பழனிவேலுக்கும் அவர்களது தாயார் நல்லம்மாளை காப்பாளராக நியமனம் செய்து தான செட்டில் மெண்ட் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மீதமுள்ள 2 ஏக்கர் 84 சென்ட் நிலம் தான் இந்த தாவா சொத்து என்றால் சரிதான். அது பாகம் பிரிக்கப்படவும் இல்லை. நான் 5ம் வகுப்பு படித்துள்ளேன். எழுத படிக்க தெரியும். நான் கிராம பஞ்சாயத்தில் 2,3 முறை தலைவராக இருந்துள்ளேன் என்றால் சரிதான். மீதமுள்ள 2 ஏக்கர் 84 சென்ட் நிலத்தைப் பொறுத்து எனது தகப்பனார் எந்த ஆவணமும் எழுதி வைக்கவில்லை என்றால் சரிதான்.

3) எனது தகப்பனார் இறந்த பின்னிட்டு தான் 1ம் பிரதிவாதியின் தாயார் நல்லம்மாள் இறந்தாரா என்றால் ஆமாம். எனது தகப்பனார் இறந்த பின்னிட்டு அவருக்கு பாத்தியப்பட்ட மீதமுள்ள 2 ஏக்கர் 84 சென்ட் நிலத்தை 1ம் பிரதிவாதியின் தாயார் நல்லம்மாளுக்கும், 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கும் பாகம் உள்ளது என்றால் அவர்களுக்கு பாகம் இல்லை. எனது வழக்குரையில் 1ம் பிரதிவாதியின் தாயார் நல்லம்மாளையும், 2 முதல் 4 பிரதிவாதிகளையும் வாரிசுகளாக விட்டுவிட்டு எனது தகப்பனார் இறந்து விட்டதாக சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எனது தகப்பனாரின் சொத்துக்களில் நல்லம்மாள் மற்றும் 2 முதல் 4 பிரதிவாதிகள் அல்லாமல் எனக்கு மட்டும் எவ்வாறு பாத்தியம் என வழக்குரையில் சொல்லியிருக்கிறேனா என்றால் எனது தகப்பனாரின் சொத்தை அவருக்கு பின்னிட்டு நான் தான் 50 வருடமாக அனுபவம் செய்கிறேன்.

4) தாவா சொத்து இல்லாமல் புத்தூர் கிராமத்தில் எனது தகப்பனாருக்கு வேறு சொத்துக்கள் இருந்ததா என்றால் இருந்தது. புத்தூர் கிராமத்தில் உள்ள எனது தகப்பனாரின் சொத்தில் வந்த வருமானத்தைக் கொண்டு புத்தூர் கிராமத்தில் எனது பெயரிலும், எனது மனைவி, குழந்தைகள் பெயரிலும் சொத்துக்கள் வாங்கப்பட்டதா என்றால் எனது தகப்பனாரின் சொத்தில் வந்த வருமானத்தில் வாங்கவில்லை, கடன் வாங்கி வாங்கினோம், வாங்கி விற்று விட்டோம். எனது தகப்பனார் இறந்த பின்னிட்டு அவர்கள் சொத்துக்கள் குறித்து எழுத்து பூர்வமாக எந்த ஆவணங்களும் அவர்கள் வாரிசுகளின் இடையில் ஏற்படவில்லை என்றால் சரிதான்.

5) எனது சகோதரிகள் அனைவரும் சேர்ந்து எனது தகப்பனாரின் சொத்துக்களிலும், அந்த சொத்தில் வந்த வருமானத்தைக் கொண்டும் வாங்கப்பட்ட என் பெயரில் உள்ள சொத்துக்களிலும் பாகம் கேட்டு குளித்தலை, சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.230/2023 வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கின் பாக சொத்தும், அ.வ.எண்.230/2023 ல் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியவில்லை. எனது சகோதரிகள் தங்களுக்குரிய பாகத்தைக் கேட்டு பலமுறை முயற்சி செய்தும் நான் பாகம் பிரித்துக் கொடுக்காமல் காலம் கடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பாகம் பிரிப்பது சம்பந்தமாக 4,5 முறை பஞ்சாயத்து நடந்ததா என்றால் இல்லை.

6) தாவா சொத்தைப் பொறுத்து 1ம் பிரதிவாதியும் தனது தாயார் பாகத்தை பெற உரிமை உடையவர் என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கு தாக்கல் செய்த போது வேண்டுமென்றே 2 முதல் 5 பிரதிவாதிகளை தரப்பினர்களாக சேர்க்காமல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும் பின்னிட்டு அவர்களாக மனு செய்து இவ்வழக்கில் சேர்ந்துள்ளனர் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் கூட்டு உரிமையாளர்களான 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு எதிராக நான் கேட்டுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

7) 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் உரிமை உள்ள விபரம் தெரிந்து இருந்தும் அவர்களுடைய பாகத்தை ஏமாற்றவும், அவர்களை அச்சுறுத்தும் நோக்கில் பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் மட்டும் தனியாக தாவா சொத்தை அனுபவம் செய்து வருவதாகவும் எனது அனுபவத்தை பிரதிவாதிகள் இடையூறு செய்வதாகவும் வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதிகள் பொய்யானது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள பதிலுரை விபரம் தெரியுமா என்றால் தெரியும். வா.சா.ஆ.1 வழக்கு சொத்திற்கு சம்பந்தம் இல்லாதது என்றால் சரியல்ல. தாவா

சொத்தின் பட்டாவில் என் பெயருடன், 1ம் பிரதிவாதியின் பெயரும் கூட்டாக உள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி பெயரில் தாவா சொத்து கூட்டு உரிமை இருந்ததால் தான் அவர் பெயர் பட்டாவில் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

8) வா.சா.ஆ.2 முதல் வா.சாஆ.7 ஆவணங்கள் எனது வழக்கை நிரூபிக்க போதுமானது அல்ல என்றால் சரியல்ல. தூய்மையான கரங்களுடன் நான் நீதிமன்றத்தை அணுகவில்லை என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் சட்டப்படி கிடைக்கத்தக்கதல்ல என்றும், பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/–R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**